நேரு சர்க்காரின் ஞானோதயம்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆவணி 8உ செவ்வாய் (24—8—54) வெளியூர்: ஆவணி 9உ புதன் (25—8—54)	மலர்: 2 இதழ்: 61

களத்தில் நிற்கிறோம்! தடைகள் பல கடந்திருக்கிறோம்!

உரிமை முழக்கம் செய்கிறோம் நாம்!

எதிர்த்தவர்கள் மூலையில் நிற்கின்றனர்!

திராவிட நாடு பிரிவினை தேவை?

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 2-வது அரசியல் மாநாட்டில்

எம். எஸ். மணி துவக்கவுரை

★

22-8-54 ஞாயிறன்று காஞ்சீபுரத்தில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 2-வது அரசியல் மாநாட்டில் திருச்சி நகர தி. மு. கழகச் செயலாளர் எம். எஸ். மணி அவர்கள் ஆற்றிய திறப்புரை:—

"பெரியோர்களே! தாய்மார்களே! கழகத் தோழர்களே! பொது மக்களே! இன்று இங்கு நடைபெறுகிற செங்கற்பட்டு மாவட்ட சமூக சீர்திருத்த மாநாட்டில் கலந்து கொள்கிற உங்கள் யாவரையும் வரவேற்புக் குழுவின் சார்பில், வருக, வருக, என உள்ளன்புடன் வரவேற்பதில் பெருமை கொள்கிறேன்;

தி. மு. கழகம், மாவட்டந் தோறும் நடத்தி வரும் மாநாடுகளை இரண்டாகப் பிரித்து, சமூக சீர்திருத்தத்திற்கென ஒரு நாளையும், அரசியல் பிரச்சினைகள் பற்றிப் பேச ஒரு நாளையும் ஒதுக்கிட்டு நடத்திவருவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த நாட்டு மக்களின் வாழ்வில் நிலவும் நலிவுக்கான காரணங்களைக் கண்டறிந்து, அந்த நலிவுகளைப் போக்கி, நல்லதோர் வளமான வாழ்வு தருவதில் தி. மு. கழகம் பெரும்பணி ஆற்றி வருகிறது.

இந்த நாட்டு மக்களில் பெரும்பாலோர், 'வாழ்வே மாயம்' என்ற தத்துவ போதனையால், வாழ்வையே நம்பாதவர்களாய், 'நங்களாலேயும் வாழ முடியும்; நாமும் வாழத்தான் பிறந்தோம்,' என்ற தன்மான உணர்வில்லாதவர்களாய், தன்னம்பிக்கை இழந்தவர்களாய் உள்ளனர்.

தன்னம்பிக்கை இல்லாது போன மக்கள், தற்குறிகள் மட்டும்தானா என்றால், இல்லை; படித்தவர், பட்டம் பெற்றவர் இப்படிப்பட்டவர் பலரும், வாழ்க்கையில் நம்பிக்கை இல்லாதவர்களாய் இருந்து வருவதைக் காண்கிறோம்.

அவர்களுக்கு இருந்த தன்னம்பிக்கையும், தன் மானமும், வீர உணர்வும், விவேக புத்தியும், இந்த நாட்டு மக்களிடை புகுத்தப்பட்ட கடவுள் தத்துவங்களால், மத புராண, இதிகாசக் கருத்துக்களால் பிய்க்கப்பட்டு விட்டன.

எனவே, மக்கள், மீண்டும் வாழ்வில் பற்றுக் கொண்டு, 'நாமும் வாழத்தான் பிறந்தோம்,' என்ற எண்ணம் பெற்று, 'நம்மாலும் வகையாக வாழ முடியும்,' என்ற தன்னம்பிக்கையையும் பெற, அவர்களிடை நிலவுகிற, அவர்கள் கைக்கொண்டிருக்கிற அத்தனை மூடப் பழக்க வழக்கங்களும், மத புராண இதிகாசக் கருத்துக்களும் அவர்களிடமிருந்து அகற்றப்பட்டாக வேண்டும்.

இன்று உலகின் மற்றெல்லா நாடுகளிலும், இந்த நாட்டைப் போலவே, தான் கண்டு பயந்த வற்றிற்கெல்லாம் கடவுள்களை உற்பத்தி செய்து வைத்துக் கொண்டிருந்த அதே மனிதர்கள், அந்தக் கடவுள்களை இன்று மாஜி கடவுள்களாக்கி விட்டு வாழ்வில் முன்னேறி, நாகரிகமாக வாழக்கற்றுக் கொண்டிருக்கிறார்கள்; ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமமாக வாழும் உரிமையையும் வசதியையும் பெற்றிருக்கிறார்கள்.

மேலை நாட்டுப் பெண்கள் இன்று விமானமோட்டிகளாகப் பணியாற்றுகிறார்கள் என்று நமக்குப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்த நாட்டுப் பெண்மணிகள், கிராமத்தில் சென்று பார்த்தால், கட்டை வண்டிகூட ஓட்டத் தெரியாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். இடது பக்கம் இழுத்துச் செல்லும் மாட்டை, மூக்கணாங் கயிற்றைப் பிடித்து இழுத்து, வலப் பக்கம் தட்டி, வண்டியை ஓட்ட வேண்டும் என்கிற சாதாரண அறிவைக்கூடப் பெறுதவர்களாக, பெறமுடியாதவர்களாக இருக்கிறார்கள்!

இந்த நிலை மாறி, மக்கள் எல்லாம்—ஆணும் பெண்ணும்—கல்வி அறிவும், பொது அறிவும் பெற்றவர்களாய், தன்மான வீரர்களாய், வாழ்வில் தன்னம்பிக்கைக் கொண்டவர்களாய் மாறி, உயரியதோர் நாகரிகமான வாழ்க்கை நடத்த வேண்டும்.

அதற்கான வழி வகைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும், நாட்டு மக்களின்—அவர்களின் இழிநிலையை, அவர்கள் பல சாதியினராய், மதத்தினராய்ப் பிரிந்து அடிமைப்பட்டுக் கிடக்கும் இழிநிலையை எடுத்துக்காட்டவும் தான் சமூக சீர்திருத்த மாநாடுகள் நடைபெறுகின்றன.

செங்கற்பட்டு மாவட்ட தி மு கழக சார்பில் நடைபெறும் சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களைத் தலைவராகவும், புரட்சி நடிகர் ராமச்சந்திரன் அவர்களைத் திறப்பாளராகவும் தேர்ந்தெடுத்துள்ளோம்—நம்மை எல்லாம் சினிமாக் கட்சியினர் என்று கேலி பேசும் தோழர்களுக்கு, இந்த நடிகர்கள் தரும் சீர்திருத்தக் கருத்து ஒருபாடமாக அமையட்டும் என்ற எண்ணத்தில்தான்!"

அவர்களுடைய வளர்ச்சிக்கு செவி சாய்க்காது அந்த இட்லருக்குச் சொந்தம் பாராட்டும் வீண் கௌரவத்தை விட்டுக்கொடுக்க மனமின்றி விடுதலை வீரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து வளர்ச்சியை வீழ்த்தி விடலாம் என எண்ணுகிறது போர்ச்சுகீசிய ஆதிக்கம்!

இந்தியாவில், போர்ச்சுகீசியர் ஆதிக்கம்புரியும் பகுதிகளில், இன்றையத் தினம் அமெரிக்கா, தனது ஆக்கிரமிப்பு நோக்கங்களை பயன்படுத்த எண்ணுகிறது என்ற செய்தி வந்துக் கொண்டிருக்

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை—இந்தியா ஒப்பந்தம் புறக்கணிக்கப்படுவது உண்மை!

நாடற்ற இந்தியர்களை ஏற்றுக்கொள்ள முடியாது

இந்தியப் பாராளுமன்றத்தில் சந்தாவின் பொறுப்பற்ற பேச்சு

புதுடில்லி, ஆக. 23—

இன்று மக்கள் சபையில் இலங்கை வாழ் இந்தியர்கள் பற்றி கேள்விகள் கேட்கப்பட்டபோது, "இந்தியா - இலங்கை ஒப்பந்தம், நாம் எதிர்பார்த்தபடி அமுல் நடத்தப்படவில்லையென்றே கொள்ளலாம்." என்று வெளிநாட்டிலாகா துணை அமைச்சர் ஏ. கே. சந்தா பதில் அளித்தார்.

நாடற்றவர்களாக்கப்படும் இந்தியர்கள் பற்றிக் கூறும் போது, "நாடற்றவர்களை இலங்கை சர்க்கார் அங்கீகரிக்கவில்லை; அத்தகையவர்கள் விரும்பினால், இந்தியப் பிரஜைகளாகலாம்; அவர்கள் அப்படிச் செய்யத் தவறினால், அல்லது அவர்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள விதிகளைத் திருப்தி செய்யாவிட்டால், இந்திய சர்க்கார், அவர்களுக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது," என்று சந்தா மேலும் கூறினார்.

"தற்காலிகமாக பர்மிட் காலாவதியான சுமார் 25 ஆயிரம் பேர்களை வெளியேற்றுவது என்று இலங்கை செய்த முடிவு, இந்திய சர்க்காருடன் கலந்தாலோசித்து செய்யப்பட்டதல்ல! ஐயாயிரம் பேர் கொண்ட முதல் கோஷ்டி அக்டோபர் அல்லது நவம்பரில் இலங்கையிலிருந்து புறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது," என்று மற்றொரு கேள்விக்கும் பதில் அளிக்கப்பட்டது.

"இலங்கையிலிருந்து திரும்பிவரும் இந்தியர்களின் புனர்வாழ்வு பற்றி, சென்னை, திரு—கொச்சி சர்க்காருடன் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறோம்," என்று அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

"இந்தியர் பற்றிய புதிய சட்டங்களில், இலங்கை சர்க்கார் தகுந்த மாறுதல்களைச் செய்யாவிடில், டில்லி ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகிவிடும் என இலங்கையில் உள்ள தூதுவர் அறிக்கை வெளியிட்டாரா?" என்று கேட்கப்பட்டபோது, "அவ்வாறு யாரும் அறிக்கை வெளியிட்டதாகத் தமக்குத் தெரியாது," என்று பண்டித நேரு பதில் அளித்தார்.

1,537 பேர் கைது!

ஆந்திராவில் மதுவிலக்கு எதிர்ப்பு

கர்னூல், ஆக. 23—

மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று ஆந்திராவில் எதிர்க்கட்சியினர் நடத்தும் ஆர்ப்பாட்டங்களில் இதுவரை 1537 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

இவர்களில் 23 பேர் பெண்களாவார்!

கோவா நிலை

அவசரத் தீர்மானத்திற்கு அனுமதி மறுப்பு

புதுடில்லி, ஆக. 23—

கோவா நிலைமையைப் பற்றி விவாதிப்பதற்காக மக்கள் சபையில் கொண்டு வரப்பட்ட அவசரத் தீர்மானங்களை சபாநாயகர் அனுமதிக்க மறுத்துவிட்டார்.

வெளிநாட்டு விவகாரங்கள் பற்றி பண்டித நேரு 25-ந் தேதி யன்று அறிக்கை சமர்ப்பிக்க ஒப்புக் கொண்டிருப்பதால் அவசரத் தீர்மானங்களை அனுமதிக்க முடியாதென்று மாவ்லங்கர் கூறினார்.

சபை விரும்பினால், இதுபற்றி விவாதிக்க பண்டிதர் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

சட்டசபையில் ஆர்ப்பாட்டம்

பார்வையாளர்கள் வெளியேற்றப்பட்டனர்

'அமைச்சரே! ராஜினாமா செய்!' என்று கோஷம்!

லக்னோ, ஆக. 23—

உத்திரப் பிரதேச சட்டசபையில் பார்வையாளர்கள் பகுதியில் கலகம் செய்து கோஷமிட்டார்கள் என்று 11 பேர் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர்.

பார்வையாளர் பகுதியிலிருந்து இவர்கள் உத்திரப் பிரதேச சர்க்காரின் விசேஷ அதிகார சட்டத்தை வாபஸ் பெற வேண்டுமென்றும், உள்நாட்டமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டுமென்றும் கோஷமிட்டார்களாம்!

சபாநாயகரின் வேண்டுகோளை மீறி அவர்கள் கோஷமிட்டார்கள் என்று தெரிகிறது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளே நுழைய எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தான் அனுமதி சீட்டுப் பெற உதவியிருக்க வேண்டுமென்றும், ஆகவே அவர்களை அமைதிப்படுத்துமாறும், சபாநாயகர், எதிர்க் கட்சித் தலைவர் ராஜ் நாராயணன் அவர்களைக் கேட்டுக் கொண்டாராம்!

இக்குற்றச் சாட்டை எதிர்க் கட்சித் தலைவர், மறுத்து, இந்த ஆர்ப்பாட்டம் முன்னேற்பாட்டின்படி நடைபெற்றது அல்ல வென்றும் கூறினார்.

இந்த நிகழ்ச்சி பற்றி விசாரணை செய்ய சபை உத்தரவிட்டது.

அட்லி—மாசேதுங் சந்திப்பு!

பீகிங், ஆக. 23—

கம்யூனிஸ்டு சீனாவின் அதிபர் மாசேதுங், பிரிட்டிஷ் எதிர்க் கட்சித் தலைவர் அட்லியையும், அவருடன் சுற்றுப்பயணம் செய்யும் தொழிற்கட்சி உறுப்பினர்களையும் நாளை சந்திப்பார் என்று தெரிகிறது.

சீனக் குடியரசின் உதயத்திற்குப் பின் மேற்கத்திய அரசியல்வாதி ஒருவரை சீன அதிபர் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும்!

நம் நாடு

சென்னை 24—8—54 செவ்வாய்

‘ஜான்புல்’ சாகசம்!

மாணவர்கள் கிளர்ச்சி செய்கின்றனர்!

ஆர்ப்பாட்டங்களுக்குக் கல்லூரி ஆசிரியர்கள் தலைமை வகிக்கின்றனர்!

பிரிட்டிஷ் சர்க்காரின் அடக்குமுறைச் சட்டங்கள் நிறைந்த சட்டப் புத்தகங்களைக் கொளுத்துகின்றனர்!

மத குருமார்கள் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஒழிய வேண்டுமென்று பிரச்சாரம் செய்கின்றனர்!

சைப்ரஸ் தீவில், மக்கள், தங்களை அடக்கி ஆளும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிடிப்பிலிருந்து விடுபட்டு, தங்கள் தாயகமான கிரீசுடன் இணைய விரும்புகின்றனர்!

தன் இனத்தவர் வாழும் சைப்ரஸ், தனக்குச் சொந்தமான நாடென்று எடுத்துக் காட்டி, அதைத் தன்னுடன் சேர்க்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று, கிரீஸ், ஐ. நா. சபையில் புகார் தாக்கல் செய்திருக்கிறது.

மத்திய கிழக்கில் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களில் சைப்ரசும் ஒன்றாகும்; சிறியதோர் தீவு; அதில் வாழும் மக்களில் எண்பது சதவிகிதத்தினர் கிரேக்கர்கள்; மீதம் உள்ள சிறுபான்மையினர் துருக்கியர்கள்.

நீண்டகாலமாகவே அன்னியர்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடு சைப்ரஸ்!

பிரிட்டன் 1878 முதல் அங்கே ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதற்கு முன்னர், துருக்கியர்கள், அங்கே இரண்டு நூற்றாண்டு காலம் ஆதிக்கம் செலுத்தினார்கள்.

கிரீசுடன் இணைய வேண்டுமென்ற கோரிக்கை சைப்ரசில் நீண்ட காலமாகவே இருந்து வந்திருக்கிறது. இப்போது விடுதலை உணர்ச்சி சைப்ரஸ் மக்கள் அனைவர் உள்ளத்திலும் பரவியிருக்கிறது.

சைப்ரஸ் நாட்டில் உள்ள கலாசாலை அதிபர்கள், நகரசபைகளின் மேயர்கள், மதகுருக்கள், மாணவர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றுதிரண்டு, ‘பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே வெளியேறு’ என்று முழக்கமிடுகின்றனர்.

உலகில் காணப்படும் ஏகாதிபத்திய நாடுகளில், பிரிட்டன், சூழ்ச்சியில் சிறந்து விளங்கும் நாடு! ‘ஜான் புல்’லின் ராஜதந்திரம், விடுதலை வேட்கை கொண்டு வீறிட்டு எழும் மக்களை அடக்கவும், அந்த மக்களில் சிலரை தனது கைப்பொம்மைகளாக்கி ஒரே இனத்தைச் சேர்ந்த மக்களிடையே கலகமூட்டியும் திறமை பெற்றதாகும்.

நிலைமை மோசமாகுமென்று தெரிந்தால், ‘ஜான் புல்’, ‘மூட்டை முடிச்சு’களுடன் புறப்பட்டுச் சென்றுவிடுவார்! பிரிட்டனின் காலனிக் கொள்கை இடத்துக்கு இடம் மாறுபடும்!

கென்யாவில் மக்களைச் சுட்டுக் கொல்வார்கள்; மலேயாவில் சுய ஆட்சி என்று பேசுவார்கள்! பிரிட்டனின் இம்மோசடியைத்தான், ‘ஜான் புல் சாகசம்’ என்பார்கள்!

நீண்ட காலமாக அரும்பாடுபட்டுக் காப்பாற்றிவந்த சூயஸ் கால்வாயிலிருந்து ‘ஜான் புல்’ வெளியேறிவிட்டார்; பிரிட்டிஷ் படைகள் கப்பலேறி லண்டன் நோக்கிச் செல்கின்றன!

ஆனால், சைப்ரசில், பிரிட்டன் தனது இராணுவத்தை நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறது. சூயஸ் கால்வாய் தன் கையை விட்டுச் சென்றவுடன், மத்திய கிழக்கில் தனக்கு இராணுவத் தளம் வேண்டுமென்பதற்காக சைப்ரசுக்கு தனது மத்தியக் கிழக்கு இராணுவத் தலைமைக் காரியாலயத்தையே மாற்றிக் கொண்டுவிட்டது!

சைப்ரசை இராணுவத் தளமாக வைத்துக்கொண்டு, சூயசில் இழந்துவிட்ட தனது வலிமையை ஈடுகட்டலாம் என்று பிரிட்டன் கருதுகிறது. ஆகவே, வழக்கம்போல், ‘விடுதலை வேண்டும்’ என்று கிளர்ச்சி செய்யும் சைப்ரஸ் மக்களுக்கு, புதிய அரசியல் சீர்திருத்தங்களை சமீபத்தில் வழங்கியிருக்கிறது.

அரசியல் சீர்திருத்தம், மாகாண சுயாட்சி, இரட்டை ஆட்சி, பூரண சுயாட்சி என்று மலிவான பெயர்களில் ஒரு சில உரிமைகளைத் தனது காலனி மக்களுக்கு வழங்கி, கொழுந்துவிட்டெரியும் விடுதலைக் கிளர்ச்சியை அடக்கி தனது ஆதிக்கத்தை நீடிப்பதில், பிரிட்டனைப் போன்று வேறு எந்த ஆதிபத்திய நாடும் நடந்து கொண்டது கிடையாது.

கடைசியாக, ‘காமன்வெல்த் உறவு’ என்று கூறிக்கொண்டு, ‘நாமெல்லாம் நண்பர்கள்; நமக்குள் ஏன் சண்டை,’ என்று சாகசமாகப் பேசிச் சுரண்டிச் செல்கிறது.

இதே முறையில்தான் சைப்ரசுக்கு அரசியல் சீர்திருத்தம் என்ற பெயரில் சில உரிமைகளை வழங்கி, சைப்ரஸ் மக்களை அடக்கிவிடலாம் என்று பிரிட்டன் நினைத்தது.

சைப்ரஸ் மக்களோ, ‘எங்களுக்கு அரசியல் சீர்திருத்தம் வேண்டாம்; சுதந்திரம் வேண்டும்; தாய்நாடான கிரீசுடன் இணைய வேண்டும்,’’ என்று கோருகின்றனர்!

வாழ்க்கையின் உயர்ந்த படியில் உள்ள மக்கள் முதல், சாதாரண மக்கள் வரை, ‘பிரிட்டனே வெளியேறு,’ என்று கிளர்ச்சி செய்கிறார்கள்!

மத்தியக் கிழக்கின் இராணுவத் தளம் ஒன்று தேவை என்பதற்காக, பிரிட்டன், சைப்ரஸ் மக்கள் மீது அடக்குமுறைகளை வீசினும், அது, பிரிட்டனுக்கும் பின்னர் பெரும் வேதனையைத் தரும் என்பது நிச்சயம்!

சைப்ரஸ் மக்கள்மீது பிரிட்டன் வீசும் அடக்குமுறைகள் விரும்பத்தகாத பல விளைவுகளை உண்டாக்கும். அங்கே வாழும் சிறுபான்மையினரான துருக்கியர்கள், ‘சைப்ரஸ் தீவு துருக்கிக்குச் சொந்தமானது’ என்று நம்புகிறார்கள். சைப்ரஸ் கிரீசுடன் இணைய வேண்டுமா, அல்லது துருக்கியுடன் இணைய வேண்டுமா என்பது பற்றிய கருத்து வேற்றுமைகள் எழலாம். இப்பிரச்னை வலுப்பெறுகிறபொழுது, அதன்மூலம் மேற்கத்திய நாடுகள் அனைத்துமே ஒன்றுபடும் அளவுக்குத் தொல்லைகள் வளரும்!

சைப்ரஸ் தீவில் காணப்படும் கொந்தளிப்பு ஐ. நா. சபைக்குக் கொண்டு செல்லப்படுவதால் மட்டும் தீர்ந்துவிடாது. ஐ. நா. சபை உலக நாடுகளிடையே ஏற்படும் சிக்கல்களை அடக்குவதிலும், சமரசமாகத் தீர்த்து வைப்பதிலும் வலிமை பெற்றதாகக் காணோம்!

இது, தனது உள்நாட்டுப் பிரச்னை என்று பிரிட்டன் அங்கே வாதாடலாம்!

மக்களின் எதிர்ப்புக்கிடையே, சைப்ரசை தனது இராணுவத்தளமாக வைத்திருக்க பிரிட்டன் முயற்சிக்குமானால், அந்த முயற்சி பலன் தராது என்பது உறுதி!

விடுதலைக் கிளர்ச்சிக்குப் பணிந்து பிரிட்டன் சைப்ரசை விட்டு வெளியேறுவதுதான் நேர்மையாகும்! அதுவன்றி பிரிட்டனின் சாகச முறைகள் இனிமேல் பலன் தராது என்பதை ஆங்கிலேயர்கள் உணர வேண்டும்!

“நீதி எங்கே?—நியாயம் தேவை!”

“சைப்ரஸ் மக்களின் பேரொலி கேளீர்”

ஐ. நா. சபையில் கிரீஸ் மனு தாக்கல்

“தன்னாட்சி உரிமை, மனிதன் சமத்துவம் ஆகியவைகளை ஒப்புக்கொண்டுள்ள சர்வதேச சங்கத்தின் நோக்கத்திற்கிணங்க, அதனுடைய மேலான கவனத்திற்கு சைப்ரஸ் மக்களுக்கான இந்த வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறேன். இந்த கோரிக்கையை அடுத்து கூடவிருக்கும் ஐ. நா. சபை பொதுக் குழுவின் சாதாரணக் கூட்டத்தில் பரிசீலிப்பதற்கான வகையிலே, நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட வேண்டும் என்று கிரேக்க நாட்டின் சார்பாக வேண்டிக்கொள்கிறேன்.”

இதுபோன்ற வாசகங்களுடன் ஆரம்பமாகும் ஒரு குறிப்பை, ஐ. நா. சபையில் கிரீஸ் நாட்டுப் பிரதிநிதி சமர்ப்பித்திருக்கிறார்.

பிரஸ்தாபக் குறிப்பில், கிரீஸ் நாட்டுப் பிரதமர் மார்ஷல் அலெக்சாண்டர் பாபாகோஸ் கையெழுத்திட்டிருக்கிறார்.

அந்தக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:—

“சைப்ரஸ் மக்களால் தங்களது தாய் நாடென கருதப்படுகிற கிரீஸ் நாட்டுடன் இணைய வேண்டும் என்று, அந்த மக்கள் பல தடவைகளில் மிகப் பெருத்த உணர்ச்சிப்பெருக்குடன் தங்கள் உள்ளக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

அதனுடைய கடந்த கால, நிகழ் கால, வருங்கால சரித்திரத்திலே, கிரேக்க நாட்டு நாகரிகம் என்கிற முறையிலே, கிரீஸ் அரசாங்கம் மிகவும் பொறுப்புணர்ச்சியுடனும், அனுதாபத்துடனும் நடந்துகொண்டு வருகிறது என்றே, தன்னாட்சி உரிமை கோருவதற்கு மக்களுக்குள்ள உரிமையை ஒப்புக்கொண்டிருக்கிற, ஐ. நா. சபையின் 1-வது விதி, 2-வது பிரிவின்படி, சைப்ரஸ் பெருமக்கள், சுதந்திரமாகவும் சுயேச்சையாகவும் அவைகளை வெளியிடும் படியாக வாய்ப்பளிக்க வேண்டும்.

சைப்ரஸ் மக்களுக்கு நீதியும் சுதந்திரமும் வழங்கப்படவேண்டும் என்று கிரீஸ் கோரும் இந்த விண்ணப்பமானது ஐ. நா. சபையிடம் எனது அரசாங்கத்துக்கு இருக்கும் அதிக பட்ச நம்பிக்கையையும், மதிப்பையும் வெளிப்படுத்துவதாகக் கருதப்படக் கூடிய சான்றாகும் என, கிரீஸ் பிரதமர் குறிப்பிடுகிறார்.

சைப்ரஸ் தீவானது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக கிரேக்கர்கள் மலிந்து வாழ்ந்து வரும் கிரேக்க நாடுகளின் கூட்டத்தைச் சேர்ந்ததாகும். 3,000 ஆண்டுகளாக அன்னியர் கொள்கைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற தென்றாலும், அந்தத் தொல்லைகள் அனைத்தையும், அதைக் கடந்து மாற்றும் தன்மையுடையனவாகவுமிருந்தன.

சைப்ரஸ் தீவு மக்களுக்குரியதாகும். அந்தத் தீவில் வாழும் மக்களில், 80·2 சதவிகிதம் பேர் கிரேக்கர்களும், 17·9 சதவிகிதம் துருக்கியரும், மீதி இரண்டு சதவிகிதம் மற்ற அன்னியரும் இருக்கின்றனர்.

1878-ம் ஆண்டில் துருக்கியிடமிருந்து, சைப்ரஸ் ஆட்சி பிரிட்டிஷாரின் கைக்கு மாறியது. 1914-ல் இங்கிலாந்து ஏகாதிபத்தியத்துடன் இணைக்கப்பட்டு, 1925-ல் காலனி அந்தஸ்தின் பிடிப்பில் வந்தது.

முதலாம் உலகப் போரிலே, சைப்ரஸ் மக்களிடத்தில் காணப்படும் கிரேக்க மனப்பான்மையை ஒட்டி, கிரீஸ் நாடு, தன்னுடைய சார்பில், ஜெர்மனியை எதிர்த்து போரில் இறங்கினால், சைப்ரஸ் தீவை கிரீசுடன் இணைத்துக் கொள்ள வகை செய்து கொடுப்பதாக, இங்கிலாந்து பேரம் பேசியது.

கிரீஸ் இரண்டாண்டு காலம் கழித்து அதன்படியே நடக்கவும் செய்தது: ஆனால், பிரிட்டனோ, தன்னுடைய உறுதி மொழியை காற்றில் பறக்கவிட்டுவிட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னும் இதுவே நிலை. அட்லாண்டிக் சாசனம், அதற்குப் பின்னர் தோன்றிய ஐ. நா. சபைக் கொள்கைகள் ஆகியவைகளில் முழு நம்பிக்கை வைத்து, தங்களுடைய உரிமையை நிர்ணயம் செய்து கொள்ள உறுதியுடன் நிற்கின்றனர். இதற்கு அத்தாட்சியாக, 1950-ஆண்டு ஜனவரி திங்களில், கிரேக்க கிறிஸ்தவ மதக்குருவே ஏற்பாடு செய்த மக்கள் ஜன வாக்கெடுப்பில், 95·7 சதவிகித மக்கள், சைப்ரஸ் தீவு, கிரீசுடன் இணைவதை ஆதரித்தனர். இதுபோன்ற எந்தக் கோரிக்கையையும், கவனிக்காத மாதிரியில் பிரிட்டன் இருந்து வருகிறது.

கிரீஸ் நாடானது பல்லாண்டுகளாக, இங்கிலாந்துடன் நேச மனப்பான்மையுடன் நடந்தது. அநேக இக்கட்டான காலங்களிலும் இணைந்திருக்கிறது. ஆனால், சைப்ரஸ் விஷயமாக, அந்த மக்களுடையவும், கிரேக்கப் பெருமக்களுடையவும் கருத்து என்னவென்பதை காலங்கள் தெரிந்து கொண்டபிறகும், வாய்ப்பளிப்பதிலிருந்து விலகியேதான், 1949-ம் ஆண்டு முதலாகவே, சைப்ரஸ் மக்களுக்கு நியாயம் வழங்கும் விஷயத்தில் ஒரு சுமுகமான முடிவுக்கு வருமாறு பிரிட்டனை, கிரீஸ் வற்புறுத்தி வருகிறது.

அரசியல் ரீதியாகவும், இரகசியமாகவும், வெளிப்படையாகவும் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு வந்த எங்கள் வேண்டுகோள்களை பிரிட்டன் மதிக்காமலிருப்பது மட்டுமல்ல; எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போலவே, இங்கிலாந்து பார்லிமெண்டிலிருந்து அவ்வப்போது வெளிப்படும் பேச்சுக்களும், அறிக்கைகளும் இருக்கின்றன” என்று, மார்ஷல் பாபாகோஸ் தனது குறிப்பில், சொல்லுகிறார்.

தனது நாட்டின் குறிப்பைப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில், ஐ. நா. சபையின் கிரீஸ் பிரதிநிதி தோழர் [illegible], எப்படியும், அந்தக் குறிப்பு ஐ. நா. சபையால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தான் நம்புவதாகவும், சுதந்திரத்திற்காகப் பரிந்து பேசக்கூடிய எல்லா நாடுகளும் ஆதரிக்கும் என்றும் கருத்து தெரிவித்தார்.

☆

மக்கள் ஆர்ப்பாட்டம்

சைப்ரஸ் தீவை விட்டு ஆங்கிலேயர் அகல வேண்டுமென்றும், அது கிரீசுடன் இணைய வேண்டுமென்றும் கிரீஸ் நாட்டின் பல நகரங்களிலே பெருத்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஏதென்ஸ் நகரிலே 20-ந்தேதி நடந்த ஆர்ப்பாட்டத்தில் 78 மக்களுக்கு மோசமாகக் காயப்படுத்தப்பட்டனர்.

கோர்பு எனும் தீவிலே, ஆங்கில அதிகாரிகளுடைய மீது கல்மாரி பொழிந்தனர். ஆங்கிலக் கழகமொன்று, பெருத்த கல்லடிபட்டு, ஜன்னல்கள் உடைபட்டு சேதத்துக்காளானது.

சலோனிகா நகரில், நூற்றுக்கணக்கான மக்கள் தெருக்களில் சூழ்ந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். போலீசாருக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில், 11 பேர் காயமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது. ரோட்ஸ் தீவில், பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது.

ஆம்னிபஸ் கம்பெனியைச் சேர்ந்த பஸ், டிராம் வண்டிகளின் கதவுகளை உடைத்து, இரண்டு மணி நேரம் பிரமாதமான ஆர்ப்பாட்டம் விளைவித்த 150 பேரை போலீஸ் கைதுசெய்திருக்கிறது.

☆

இருள் சூழ வைத்தனர்

சைப்ரஸ் தீவின் துறைமுகப் பட்டணமான பாமகுஸ்டா, 21-ந் தேதியன்று இருள் சூழ்ந்து காணப்பட்டது. மின்சார உற்பத்திச் சாலைகள் ஆர்ப்பாட்டக்காரர்களால், உடைத்தெறியப்பட்டன. போலீசார் தீவிரமாகப் புலனாய்ந்து வருகின்றனர். உடைபட்ட கதவுகளின் மேல், “கிரீசுடன் ஒன்றுபடுவோம்” என்ற மொழிகள், எழுதப்பட்டுள்ளன.

☆

பிரிட்டன் சீறுகிறது

சைப்ரசை இணைக்கக் கோரி நேற்று இரவு நடந்த ஒரு ஆர்ப்பாட்டக் கோஷ்டியினரால், கிரீஸ் பகுதியில் ஆங்கிலத் தூதுவர் இருப்பிடத்தைச் சுற்றியுள்ள தோட்டத்தில், வெடி மருந்து வைத்து வெடிக்கச் செய்ததைக் கண்டித்து, கிரீஸ் அரசாங்கத்துக்கு ஒரு கண்டனக் குறிப்பை அனுப்பியிருக்கிறது.

பிரிட்டிஷ் ராஜாங்கத் தூதுவர் சார்லஸ் பீக் என்பவரால், கிரீஸின் அந்நிய நாட்டு விவகார அதிகாரி கிரோ என்பவரிடம் இம்மாதிரி கண்டனக் குறிப்பு சேர்ப்பிக்கப்பட்டது.

பட்டம் தாணுவின் அடக்குமுறைக்கு கண்டனம்

திரு—தமிழர் பிரச்னையில் நீதி வழங்க வற்புறுத்தல்

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. 2-வது அரசியல் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

அனுதாபம்

(அ) 'நம் நாடு' துணை ஆசிரியர் தோழர் காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்களின் அருமை மகன் தோழர் அருணாசலம் அவர்கள் இயற்கை யெய்தியமைக் குறித்து இம்மாநாடு மிகவும் வருந்துவதுடன், அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(ஆ) பால்செட்டி சத்திரம் தி. மு. க. கிளைச் செயலாளர் ஆர். சபாபதி அவர்கள் இயற்கை யெய்தியமை குறித்து இம்மாநாடு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்.

☆

பாராட்டு

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டங்களில் ஈடுபட்டு, அரசியலாரின் அடக்குமுறைகளுக்கு ஆளாகியும், சிறை சென்றும் பணியாற்றிய செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கழக அறப்போர் வீரர்களுக்கு, இம்மாநாடு தனது மனமார்ந்த பாராட்டுதலையும் வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

—வி. என். கோவிந்தராசன்
—ஜெ. பிரிவாதுரை

☆

வீர வணக்கம்

(அ) சென்ற ஜூலை திங்களில் நடந்தேறிய தி. மு. கழக மும்முனைப் போராட்டத்தின் போது அரசியலாரின் கொடிய அடக்குமுறைக்கும், அம்பாக்கி வேட்டுக்கும் பலியான நம் அறப்போர் வீரர்களுக்கு இம்மாநாடு தனது பணிவன்பான வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

(ஆ) மும்முனைப் போராட்டத்தின்போது அரசியலாரின் கொடுமையான அடக்குமுறைக்கும், கொடுமைகளுக்கும் இலக்காகி உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தினருக்கு தக்க நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

—தூத்துக்குடி என் நடராஜன்
—அம்பில் தர்மலிங்கம்

☆

சதி வழக்கு

மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டு கடமை யுணர்ச்சியுடன் தொண்டாற்றிய கழகத் தோழர்கள் மீதும், கழகத்தின் மீதும் மாசு கற்பிக்கும் முகத்தான், தூத்துக்குடி—கல்லக்குடி ஆகிய இடங்களில் கழக வீரர்கள்மீது விடப்பட்டுள்ள அபாண்ட சதி வழக்குகளை வாபஸ் பெறுமாறு அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது

—அ. பொன்னம்பலனார்
—வோரூரணி அடைக்கலம்

☆

நெசவுத் தொழில்

விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியான நெசவுத் தொழிலையும்—அத்தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களின் அவலநிலையைப் போக்கவும், டெல்லி சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்காது வாளாவிருக்கும் தன்மையை இம்மாநாடு மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், குறிப்பிட்ட காலத்திற்காவது சென்னை ஆலைகளில் தயாராகும் நூலை வெளி மாநிலங்களுக்கு அனுப்பாமல் தடுத்தும், அதே போன்று திராவிடத்தில் தயாராகும் லுங்கி ஜவுளிகளை மலேயா, சிங்கப்பூர், தென்ஆப்பிரிக்கா, இலங்கை போன்ற வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதியும், மற்ற ஏற்பாட்டினையும் செய்ய சென்னை அரசியலார் டெல்லி ஆட்சி பீடத்தினரை வற்புறுத்துமாறு இம்மாநாடு எடுத்துக் காட்டி வினையாற்றுகிறது.

—என். எஸ். இளங்கோ
—அய்யம்பேட்டை அர்த்தநாரி

☆

அணைக்கட்டு

நீர்ப்பாசன வசதி மிக மிகக் குறைவுபட்டுள்ள செங்கற்பட்டு மாவட்டத்தில் பாலாற்றில் தண்ணீர் விடுவதற்கான ஏற்பாட்டினை மைசூர் சர்க்காருடன் சென்னை சர்க்கார் கலந்து பேசி உடனடியாக ஆவன செய்ய வேண்டுவதுடன், அவ்விதம் விடப்படும் தண்ணீர் வீண்போகாமல் தடுக்க பாலாற்றில் பெரிய அணைக்கட்டையும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலாகிலும், நிறுவ வேண்டுமென டெல்லி சர்க்காரை வற்புறுத்த வேண்டுமென்று சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—எ என். சி கிருஷ்ணசாமி
—ஈ. பலராமன்

☆

உயர்நிலைப் பள்ளி

செங்கற்பட்டு மாவட்டம்—ஆவடியில் பத்தாயிரம் மக்களுக்கு மேல் வசித்து வந்தும், அவ்விடம் உயர்நிலைப் பள்ளியில்லாததால், அப்பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை அரசியலாருக்கும், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றத்தினருக்கும், நினைவூட்டுவதுடன், உடன் ஒரு உயர்நிலைப் பள்ளியை ஆவடியில் நிறுவ வேண்டுமென செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றத்தினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—என் கே. சுந்தரேசன்
—சி விஜயராகவன்

☆

நிலச் சீர்திருத்தம்

விவசாயத் தொழிலாளரின் அவல நிலையைத் தீர்க்க, ஏழைகளுக்கு,— உழுபவருக்கு நிலம் உரிமையாகும் வகையில் நிலச் சீர்திருத்த சட்டத்தை உடனடியாக செயல் முறையில் கொண்டு வர வேண்டுமென சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—எ கே. வேலன்
—திண்டுக்கல் வீராசன்

☆

பிரெஞ்சிந்தியா

(அ) விடுதலை பெற்ற ஏகாதிபத்தியத்தின் பிடிப்புகளைத் தளர்த்து, தளர்ந்து வரும் இன்றைய நிலையில், உலகிற்கே விடுதலை வேட்கையை நினைவூட்டிய பிரெஞ்சு ஆட்சியினர், புதுவை—காரைக்கால் பகுதிக்கு சுதந்திரம் வழங்குவதற்கு இன்றும் கூட தயங்கி வருவதைக் கண்டு இம்மாநாடு மிகவும் வருந்துவதுடன், உடனடியாக புதுவை—காரைப் பகுதி மக்களின் எழுச்சிக்கேற்ப உடனடியாக உரிமை யளிக்க வேண்டுமென்று இம்மாநாடு பிரெஞ்சு ஆதிக்கத்தினருக்கு எச்சரிக்கை செய்கிறது.

(ஆ) புதுவை—காரைப் பகுதியின் விடுதலைப் போரில் கலந்து அரும்பணி யாற்றிவரும் தி. மு. கழகத் தோழர்களையும், மற்றக் கட்சியினரையும் இம்மாநாடு மனமாரப் பாராட்டுகிறது.

—திண்டி வில்லாளன்
—திண்டுக்கல் சமதர்மம், எம் சி

☆

இலங்கைத் தமிழர்கள்

(அ) இலங்கையிலுள்ள இந்தியர்களின்—குறிப்பாக தமிழர்களின் நலனை கவனிப்பதற்கும் தக்க சமயத்தில் நடவடிக்கை எடுத்து ஆவன செய்வதற்கும் டெல்லி சர்க்கார் தவறிவிட்டதையும்—இப்பிரச்னையில் டெல்லி ஆட்சிபீடத்தினருக்கு உள்ள ஓர வஞ்சனையையும் கண்டு இம்மாநாடு மிகவும் வருந்துவதுடன் டெல்லி ஆட்சிபீடத்தினரின் போக்கையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

(ஆ) இலங்கையில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்த்து, அவ்விடமிருந்து வெளியேற்றப்படவிருக்கும் ஆயிரக் கணக்கான தமிழர்களுக்குத் தக்க பாதுகாப்பும் உதவியும் அளிக்க சென்னை அரசியலாரும், டெல்லி ஆட்சி பீடத்தினரும் உடனடியாக ஆவன செய்தாக வேண்டுமென்று இம்மாநாடு வற்புறுத்துகிறது.

—இரா. இளம்வழுதி
—க. அறிவழகன்

☆

கவர்னர் சம்பளம்

சென்னை கவர்னருக்குச் சம்பளம் என்ற பெயரால் ஆண்டு ஒன்றுக்குப் பொது மக்களின் வரிப் பணத்தைக் கொண்டு ஏறத்தாழ பத்து லட்ச ரூபாய் விரயமாக்கப்படுவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், இச்செலவினைக் குறைக்க நடவடிக்கைகளில் ஈடுபட முற்போக்குக் கட்சிகளெல்லாம் முன்வர வேண்டுமென்று லால்குடியில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இம்மாநாடு நினைவுபடுத்துவதோடு இதற்கான நடவடிக்கை எடுக்குமாறு தி. மு. கழகப் பொதுக் குழுவை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—என். வி. நடராசன்
—மதுரை அப்பாச்சாமி

☆

திரு—தமிழர் பிரச்னை

(அ) திரு—கொச்சி தமிழர் உரிமைப் போராட்டத்தில், தி. மு கழகப் பொதுச் செயலாளர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, திரு—கொச்சி தமிழர் பகுதியிலுள்ள கழக வீரர்கள், 6—8—54-ம் நாளன்று அடையாள மறியலை வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடத்தி, அதில் அரசியலாரின் அடக்குமுறைக்கு ஆளாகி கைதான 111 தி மு. கழக வீரர்களையும் மற்றவர்களையும் இம்மாநாடு மனமாரப் பாராட்டுகிறது.

(ஆ) திரு—கொச்சி தமிழர் உரிமைப் போரில் ஈடுபட்டுத் தொண்டாற்றிய அறப்போர் வீரர்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்துவிட்டு, 11 உயிர்களைப் பலி கொண்டும், நூற்றுக் கணக்கான தோழர்களைச் சிறைப்படுத்தியதுடன், சிறைப்பட்ட அறப் போராட்ட வீரர்களை சிறைச்சாலைக்குள்ளும் அடித்துத் துன்புறுத்தி வருவதுடன், அறப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தோழர்களின் குடும்பத்தினருக்குத் தொல்லை விளைவித்தும், குறிப்பாக நாகர்கோவில் தி. மு. கழக அலுவலகத்தைச் சோதனையிட்டு எதேச்சாதிகார ஆட்சி நடத்திவரும் பட்டம் தாணு சர்க்காரை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

(இ) இவ்வித குழப்ப நிலைக்குக் காரணமாயிருக்கும் டெல்லி ஆட்சி பீடத்தினர்-திரு-கொச்சி தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சிந்தித்துப் பார்த்து உடனடியாக எல்லை நிர்ணயப் பிரச்சினையை செயல் முறையில் தீர்த்துவைத்து அமைதியை நிலை நாட்டுமாறு டெல்லி அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துவதுடன், திரு—கொச்சி தமிழர் பகுதியில் ஏற்பட்டுள்ள நிலைமையை அறிந்துவர பாரபட்சமற்ற குழு ஒன்றை அனுப்புமாறு சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

(ஈ) திருவிதாங்கூர்—கொச்சி தமிழ்ப் பகுதியில் போராடி வரும் திராவிட முன்னேற்றக் கழகம் அமைதி, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளுடன் செயலாற்றி வந்தும், அதன் மீது பழி சுமத்தும் முறையிலும், கொள்கை மீது குற்றம் கற்பிக்கும் வகையிலும், "தினமலர்" என்ற பத்திரிகை தனது தலையங்கம் ஒன்றில் தி. மு. கழகம் பலாத்காரத்தில் நம்பிக்கையுடையது என்று கூறியிருப்பதைக் கண்டிப்பதுடன், அதன்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை பொதுச் செயலாளரிடம் இம்மாநாடு ஒப்படைக்கிறது.

—இரா. நெடுஞ்செழியன்
—கே. ஏ. மதியழகன்
—என், முத்து

தூத்துக்குடி சதி வழக்கு

17-8-54ல் நடைபெற்ற தூத்துக்குடி சதி வழக்கு விசாரணையில் பிராசிக்யூஷன் தரப்பில் சாட்சியமளித்த வெங்கிடசாமி நாயுடு எதிர்தரப்பு வழக்கறிஞர் பி. ஏ. தங்கசாமி நாடாரால் விசாரிக்கப்பட்டபின், மேலும் எதிர்தரப்பு வழக்கறிஞர்களால் அன்றையதினமே விசாரிக்கப்பட்டார். விவரம் வருமாறு:—

இரண்டாவதாக, வழக்கறிஞர் எம். செல்லையப்ப பிள்ளை சாட்சியை குறுக்கு விசாரணை செய்த பொழுது சாட்சி கூறியதாவது:-

"கீழ்க் கோர்ட்டில் 1, 2 எதிரிகளைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொன்னது ஞாபகமில்லை; எனக்கு மாதம் 15 அல்லது 20 நாள் வேலை கிடைக்கும்; எனக்கு சத்திய மூர்த்தி அய்யரைத் தெரியும்; அவர் வீட்டில் நான் வேலை செய்யவில்லை; அவர் எனக்கு மாதம் 3 அல்லது 4 ரூபாய் கொடுக்கமாட்டார்; கோதண்டராமன் வாசகசாலை மேல்படியில் நின்றார்; நான் அடுத்த படியில் நின்றேன்; கீழ்க் கோர்ட்டில், கோதண்டராம பண்ணையார் என்னுடன்தான் நின்றார் என்று சொன்னதாக ஞாபகமில்லை.

நான் அங்கு 15 நிமிடங்கள் நின்றேன்; நாங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை; சம்பவம் பற்றி எந்த அதிகாரிக்கும் கூறவேண்டுமென்று எனக்குப் படவில்லை. ராஜாஜியின் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து ரயில் நிறுத்தம் செய்யப்படுமென்று 14—7—53-ந் தேதிக்கு 3 அல்லது 4 நாட்களுக்கு முன்னுலே எனக்குத் தெரியும்; நானும், முதல் சாட்சியும் வாசகசாலை உள்ளே இருந்தோம் என்று சொன்னால் அது தவறு; வாசகசாலை உள்ளே இருந்த 30பேர்களும் யாரென்று எனக்குத் தெரியாதென்று கீழ்க் கோர்ட்டில் கூறியதாக ஞாபகமில்லை."

அடுத்து, வழக்கறிஞர் பி. என். கந்தையா பிள்ளை சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். அப்பொழுது சாட்சி கூறியதாவது:—

"என் வீட்டுக்கும், வாசகசாலைக்கும் 1½ மைல் தூரம் இருக்கிறது; வாசகசாலைக்கு, சம்பவத்துக்கு முன்பு ஒரு தடவை பத்திரிகை படிக்கப் போயிருக்கிறேன்; நான் வேறெங்கும் பத்திரிகை படிப்பதில்லை; தி. மு. க.-வுக்கும், அந்த வாசகசாலைக்கும் சம்பந்தமில்லை; தி. மு க. உறுப்பினர் அங்கு வருவதுண்டு; 14—7—53-ல், அங்கு எத்தனை தி. மு. க. உறுப்பினர் இருந்தார்களென சொல்ல முடியாது; தி. மு. க.—காரர்கள் ரயில் நிறுத்தப் போகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்: அது சம்பந்தமாக எங்கே கூடப் போகிறார்கள் என்பது தெரியாது; நான் எந்தவித காரணமுமில்லாமல்தான் கடைத் தெருவுக்கு வந்தேன்; கீழ்க் கோர்ட்டில், 'என் மருமகனைப் பார்க்கத்தான் வந்தேன்,' என்று கூறியிருக்கிறேன்; சம்பவத்திற்கு பிறகு முதல் தடவையாக ஒரு வாரத்துக்குப் பிறகுதான் நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் கூறியிருக்கிறேன்: 1-லிருந்து 5-எதிரிகளிடம் நான் எப்பொழுதும் பேசியது கிடையாது."

அடுத்து, வழக்கறிஞர் இரா. இளம்வழுதி (தண்டபாணி) அவர்கள் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். சாட்சி கூறியதாவது:—

"அண்ணாதுரை தி. மு. கழக தலைவர்; தி. மு. கழக காரியதரிசி யாரென்று தெரியாது; எனக்கு தி. மு. கழக கொள்கை தெரியும்; ரயில் நிறுத்தம், ஜவகர்லால்நேரு 'நான்சென்ஸ்' என்று கூறியதற்காக அல்ல—ராஜாஜியின் கல்வித் திட்டத்தை எதிர்த்து தான் நடைபெற்றது; நான் 12—7—53, 13—7—53, 14—7—53 தேதிகளில் பத்திரிகை படிக்கவில்லை; வாசகசாலையில் 10 அல்லது 12 பேர்தான் இருந்தார்களென்று நான் கீழ்க் கோர்ட்டில் கூறியது ஞாபகமில்லை; கோதண்டராமன், நயினார் பண்ணையார் உள்பட 10 அல்லது 12 பேர்தான் இருந்தார்கள்; நான் என் மருமகனை 14ந்தேதி மாலை 7 அல்லது 7-15 மணிக்குச் சந்தித்தேன்; அவனிடம் முக்கால் மணி நேரம் பேசினேன்; சண்முகபுரம் நாடார்களுக்கும், புதுக்கிராம பிராமணர்களுக்கும் பகை உண்டு; பிராமணர்கள் தூண்டுதலால் நான் பொய் சாட்சி கூறுவதாக சொல்வது தவறு; வாசகசாலையில் படங்கள் இருந்ததா என்று எனக்குத் தெரியாது."

சர்க்கார் தரப்பு வக்கீல் குறுக்கு விசாரணை செய்த பொழுது சாட்சி கூறியதாவது:

"ஐந்தாவது எதிரி நடராசனை நான் கீழ்க் கோர்ட்டில் அடையாளம் காட்டவில்லை; அதற்கு பிறகு அவரை முனிசிபல் கட்டத்துக்கு வரும்பொழுதுதான் பார்த்தேன்: அதனால்தான் இப்பொழுது அடையாளம் காட்டுகிறேன்."

முகவரி மாற்றம்

இலங்கை, தி. மு. க. தலைமை நிலைய அலுவலகம் 11-1/5 செல்மண்ட் தெரு, கொழும்பிலிருந்து, 20—8—54 முதல் "22, டயஸ் பிளேஸ், கொழும்பு" என்ற முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

பிறப்பு

16—8—54ல், மதுரை தல்லாகுளம் கிளைமதி நூல் நிலைய பொறுப்பாளரும், கோரிப்பாளையம் இளைஞர் பகுத்தறிவு மன்ற செயல் வீரருமான தோழர் சி. இராசகோபால் அவர்களின் துணைவியார் தோழியர் பார்வதிக்கு ஓர் ஆண் மகவு பிறந்து தாயும்—சேயும் நலம் இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு 1 அன்பளிக்கப்பட்டது-வரப்பெற்றோம்-நன்றியுடையது—பொறுப்பாளர்.

தன்னம்பிக்கை இழந்து தவிக்கிறோம்

தன்மானம் பெற்று வாழ வேண்டாமா?

பொது அறிவு பெறவே சமூக மாநாடு

சி.வி.எம். அண்ணாமலை வரவேற்புரை

காஞ்சீபுரத்தில் 21, 22-8-54 ஆகிய நாட்களில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக மாநாடுகளில், மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவரும், செங்கற்பட்டு மாவட்ட தி மு. க. செயலாளரும், காஞ்சீபுரம் நகரசபை உறுப்பினருமான தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் மாநாட்டிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்று, இரு நாட்களிலும் சொற்பொழிவு நிகழ்த்தினர். அவரது உரையின் சுருக்கம் கீழே தரப்படுகிறது :—

அண்ணா அவர்களே! மாநாட்டுப் பிரதிநிதிகளே! தோழர்களே! தாய்மார்களே! உங்கள் அனைவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம். பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரான காஞ்சீபுரத்தில் நடக்க இருக்கும் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 2-வது அரசியல் மாநாட்டை நடத்தி வைக்கின்ற பெரும் பணியை எனக்களித்து பெருமைப் படுத்திய வரவேற்பு குழுவினருக்கு என் நன்றி!

காஞ்சீபுரம் என்று சொன்னதுமே பல்லவர் ஆட்சியின் பெருமையைப் பற்றியும், ஸ்தலத்தின் மகிமையைப் பற்றியும், பட்டுப் புடவைகளுக்குப் பெயர் போன ஊர் என்றும் சொல்லிப் பெருமைப் படுவார்கள். ஆனால், இன்று காஞ்சீபுரம் என்று சொன்னதுமே வகுத்தறிவு இயக்கம் நம் கண்முன்னே நிற்கிறது

நேற்றைய தினம் இங்கே சமூக சீர்திருத்த மாநாடு வெகு சிறப்பாக நடைபெற்றது. அத்தகைய சமுதாய சீர்திருத்தத்தை ஈரோட்டில் பயின்றோம், இன்றைய தினம் நாடெங்கும் பரப்பி, நல்லதொரு சமுதாயத்தை உண்டாக்கி இருக்கிறோம். அத்தகைய சமுதாயம், இழந்த தன் சொந்த நாட்டை மீண்டும் பெற வழி காண வேண்டும்!

சென்ற ஆண்டிலே நம்முடைய தலைவர்கள், இயக்கத் தோழர்கள் சுமார் 6000-க்கு மேற்பட்டவர்கள் சிறைச்சாலையிலே இருந்தோம்; இன்று வெளியில் இருக்கிறோம். எதற்காக சிறை சென்றோமோ அந்தப் பிரச்னையில் வெற்றி கண்டு இருக்கிறோம்; எனவே, நாம் அடைந்த வெற்றியை எண்ணிப் பார்ப்பதற்கும், அந்தப் போராட்டத்தில் உயிர் நீத்த உத்தமர்களுக்கு வணக்கம் செலுத்தவும், நாம் இதுவரையில் செய்த சேவையை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும், அதே சமயத்தில் எதிர்காலத்தில் நாம் செய்யவேண்டிய வேலைத் திட்டம் என்ன என்பதை கலந்து பேசி திட்டம் தீட்டி செயலாற்றவும் நாம் இங்கே கூடியிருக்கிறோம்

தி. மு. கழகம் துவங்கிய நேரத்திலே நம்மைப் பற்றி பலர் பலவாறாகக் கருதினார்கள் 'திராவிடர் இயக்கம் இனி ஒழிந்து விடும்,' என்று அரசியல் ஆருடம் கணித்தார்கள், ஆசைப்பட்டார்கள்! அந்த நேரத்தில் சென்னை மாகாணத்தின் பிரதமராக ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் இருந்தார். நம்முடைய இயக்கம் வளர்ந்து வருவதைக் கண்டதும் 'இவர்கள் ஒழிந்து விடுவார்கள் என்று கருதினோம்; ஆனால், வளர்ந்து வருகிறார்களே; இதற்கு என்ன காரணம்,' என்று யோசித்து, 'அண்ணாவும், தி மு. கழகத் தலைவர்களும் எழுதுகின்ற புத்தகங்களை மக்கள் படிக்கிறார்கள்; எனவே, அவர்கள் எழுதுகிற புத்தகங்களை தடை செய்துவிட்டால் ஒழிந்து விடுவார்கள்," என்று கருதி, 'ஆரிய மாயை,' மற்றும் சில புத்தகங்களைத் தடை செய்து, அண்ணாவையும் சிறையில் அடைத்தார்; அப்போதும் வளர்ந்தோம்!

பிறகு குமாரசாமி ராஜா பிரதமரானார்; அவர் கருதினார்—இவர்கள் நாடகத்தின் மூலமாகவும், மேடைகளின் மூலமாகவும் மக்களை சந்திக்கிறார்கள்; எனவே, இயக்க நாடகங்களைத் தடை செய்து பொதுக் கூட்டங்களுக்கும் தடை விதித்து விட்டால்... அவ்வாறு முயன்றும் பார்த்தார்; நாம் தடையை மீறி வளர்ந்து வருவதைக் கண்டார்!

அவருக்குப் பிறகு ஆச்சாரியார் பிரதமராக வந்தார்; அவர் கருதினார்—சினிமா எழுத்தின் மூலம் மக்களைக் கவர்ந்துவிடுகிறார்கள்; எனவே, சினிமாவை ஒழித்துவிட்டால் அவர்கள் வளர முடியாது;—எனக் கருதி, சென்சார் போர்டு கையில் கத்தரிக்கோலை கொடுத்து வேலை செய்தார். அதிலும் நம்மை அழிக்க முடியாத காரணத்தினால், நேரடியாகவே தி. மு. கழகத்தை ஒழிக்கப் போவதாக சவால்விட்டு தலைவர்களை சிறையில் அடைத்து தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி, நேருக்கு நேர் நம்மோடு மோதினார். நாம் இன்றும் களத்திலே நிற்கிறோம்! சவால் விட்டவர், மூக்காலே மோட்டைக் கொண்டு மூலையில் உட்கார்ந்து விட்டார்!

இப்போது காமராஜர் பிரதமராக வந்திருக்கிறார். இந்த நேரத்திலேதான் இந்தியாவின் பல திக்குகளிலே உரிமைப் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. அவற்றின் சில நல்ல முடிவை நோக்கியும், சில, தெளிவுகாணாத புதுக் குழப்பங்களை சந்திக்கும் நிலையிலும் நடைபோடுகின்றன என்பதையும் நாடறியும்.

இந்திய உபகண்டத்தில் இருக்கிற கோவா, டையு, டாமன் போன்ற பகுதிகளில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் வியாபாரிகளாக வந்த போர்ச்சுகீசியர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவைகளெல்லாம் இந்தியாவோடு இணையவேண்டுமென்று விடுதலை வீரர்கள் ஆகஸ்டு 15-ல் உரிமைக் கிளர்ச்சியைத் துவக்கியிருக்கின்றனர்.

எம். எஸ். மணி பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. அப்படி ஏற்பட்டால், கொரியாவைப் போன்ற ஒரு யுத்தம் இந்தியாவிலும் ஏற்படுவதற்கு போர்ச்சுகீசியர்கள் காரணஸ்தர்கள் என்ற குற்றச்சாட்டை சுமந்து கொள்ளாமல் உடனடியாக அந்தப் பகுதிகளை இந்தியாவிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேற வேண்டும் என உரிமைக் கிளர்ச்சி நடைபெற்று வருகிறது.

அதே போன்று இங்கே பிரெஞ்சிந்தியப் பிரதேசமென அழைக்கப்படும் புதுவை—காரைக்கால் பகுதிகளிலே அறம்போரின் உத்வேகம் குறையவில்லை. பாரிஸ் மன்னர்களின் சந்தையாக மாறிவிட்ட மாண்டியும்—காரையும் புதுவாழ்வு பெறத் துடிக்கின்றது. ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு மேலாக முரசம் ஒலித்தும் போர்க்கொடியை உயர்த்தியவர்கள் புதுவை—காரை வீரர்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தி உரிமை முழக்கம் செய்தனர். அதைக் கண்டு பிரெஞ்சு ஆதிக்கம் தடியடி தர்பார், சிறைக் கொடுமை எல்லாம் நடத்திப் பார்த்தது கிராமம் கிராமமாகக் கிளர்ச்சி வீரர்களின் கையிலே சிக்கின. மொழியிலே கனல் கலந்து கண்டவாறு பேசி ஆவேசத் தாண்டவம் ஆடிய பிரெஞ்சு ஆதிக்கத்தார் இன்றைய தினம் ஈன ஸ்வரத்தில் பேச ஆரம்பித்து விட்டனர்.

அலமதியான முறையில் அதிகாரத்தை மாற்றிக் கொடுத்துவிட்டு கப்பலேறப் போகிறார்கள் என்ற செய்தி கேட்டு மகிழ்கிறோம்.

எல்லா முற்போக்குக் கட்சிகளும், தி. மு. கழகமும் தனது தொண்டர்களை சிறைக்கனுப்பியும், தடியடிகளுக்கும் குண்டர்தம் தொல்லைகளுக்கும் பலி கொடுத்தும், இறுதி வெற்றி கண்டு களிக்கும் வாய்ப்பைப் பெற்றுவிட்டன. பிரெஞ்சுப் பிடியிலே இருந்து விடுபடும் புதுவை—காரை பகுதிகள் இந்திய அரசு எனப்படும் வடநாட்டு ஏகாதிபத்திய வெம்மையில் தானே வாடவேண்டும் என வேதனைப்படுவோர் பலர் உளரெனினும், ஒரு ஏகாதிபத்தியம் தொலைகிறது என்ற அளவில் மகிழ்வெய்துகிறோம்.

புதுவையும், காரையையும் விட்டுச் செல்வதென்றால் கொஞ்சம் வேதனையாகத்தான் இருக்கும். என் செய்வது? இதைவிட வேறுவித மான முறையிலே வெளியேற்றப்பட வேண்டிய நிலைமை ஏற்படாததற்கு பாரிஸ் மன்னர்கள் சந்தோஷப்பட்டுத் தீரவேண்டும் என்ற ஆறுதலைத்தான் அவர்களுக்கு அளிக்க விரும்புகிறோம்.

அதேபோன்று பரம்பரையாக இலங்கையை வளப்படுத்தி வாழ்கின்ற இந்தியர்களைத் தாய்நாட்டிற்கு அனுப்ப 4 ஆண்டுகட்கு முன்பே சேனநாயகா திட்டம் தீட்டினார். இந்தியத் தூதர் சி. சி. தேசாய்க்கும், இலங்கைப் பிரதமர் கொத்தலாவலைக்கும் ஏற்பட்ட பேச்சுவார்த்தையின் உடனடியாக 25,000 தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்.

மத வெறியின் காரணமாக் குடும்பங்களை இரத்தக்குட்டையில் மிதக்கவிட்ட வடநாட்டு மக்களுக்கு ஆதரவு காட்டி, இதுவரை அவர்களுக்காக 200 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்த இந்திய அரசாங்கம் தமிழர்களை மட்டும் நாடற்ற நாடோடிகளாக்குகிறது. அதற்கு இந்திய அரசாங்கமும் சம்மதம் தந்து இருக்கிறது.

அந்த உழைத்து உருக்குலைந்த உத்தமர்களின் நிலை என்ன? அவர்களை சென்னை அரசாங்கம் கவனிக்கவேண்டுமென தேஷ்முக் பேசியிருக்கிறார். அப்படி கூறியதற்குக் காரணம் தமிழர்கள் என்பதால் தானே? 'ஏக இந்தியா' என்று பேசுபவர்கள் சற்று நினைத்துப் பார்த்தால், நாம் கோரும் திராவிட நாடு பிரச்சினையை புரிந்து கொள்ளுவார்கள்.

இங்கே திரு—கொச்சியில் உள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழகத்தோடு சேரவேண்டுமென கிளர்ச்சி செய்கின்றனர். ஆகஸ்டு 6-ந் தேதி நாகர்கோவிலிலும், செங்கோட்டையிலும் 110 தி. மு. கழகத் தோழர்கள் கைது செய்யப்

(4-ம் கலம் பார்க்க)

★

தற்காலிக நிவாரணம் போதுமா?

நிரந்தரமான விடுதலை வேண்டும்!

அரசியல் மாநாட்டில் சி. வி. எம். வரவேற்புரை

"பெரியோர்களே! தோழர்களே! தாய்மார்களே! நேற்று சமூக சீர்திருத்த மாநாடு மிகும் சிறப்புமாக நடைபெற்றது. தி. மு கழகத்தின் சமுதாயக் கொள்கைகள் குறித்து, தலைவர்கள் தந்த விளக்கங்கள் நமக்கெல்லாம் பெரும் வழிகாட்டியாய் அமைந்தது. இன்று சமுதாயத்தைப் போலவே நமக்கு தி. மு கழகத்திற்கு சமபங்கு கவலை, அரசியல் துறையிலும் இருக்கிறது என்பதால், இன்று, அரசியல் மாநாடு நடைபெறுகிறது.

நமது அரசியல் இலட்சியமாக் திராவிடநாடு கோரிக்கை எத்தனை நியாயமானது என்பதை இன்று பேசுகிற நமது முன்னணி வீரர்கள் விளக்குவார்கள்.

முன்பு ஆட்சி பீடத்திலிருந்த ஆச்சாரியார், மாணிக்கவேலரை அடிமை கொண்டது போலவே, காமராசரும், ராமசாமி படையாச்சியை விலைக்கு வாங்கியிருக்கிறார்.

இந்த இழி செயலை மறைக்க, தென்னாற்காடு மாவட்ட மக்களிடம், ராமசாமி படையாச்சியார் அந்த மாவட்ட மக்களுக்கு ஏதோ இலவசக் கல்விச் சலுகை வாங்கித் தந்துவிட்டதின் மூலம் வன்னிய மக்களுக்கு நன்மை செய்து விட்டதாகப் பேசுகிறார்களாம்!

இது எப்படி இருக்கிறது? ஒருவனுக்குக் குடல் நோய், ஓயாத வலி; அவன் ஓரணாவிற்கு சோடா மாவை வாங்கி, அதையும் தின்று தண்ணீர் குடிக்கிறான்; சற்று தற்காலிகமாக வலி போகிறது; ஆனாலும் மீண்டும் அந்த வலி, குடல் நோய் தீர்க்கப்படுகிற வகையில் வைத்தான் செய்யும்; அவ்வப்போது சோடா மாவை உண்பதினாலேயே குடல் நோய் போய்விடாது; அதைப் போன்றே வன்னிய சமூகத்தின் குறைகள், கல்விச் சலுகை பெற்றுவிட்டதினாலேயே தீர்ந்துவிட முடியாது. எனவே, தான் தி மு கழகம், வன்னிய மூகம் போன்ற பிற்பட்ட சமூக மக்கள் எல்லாம் உலக மக்களைப் போல், எல்லா வாழ்வு வசதிகளையும், உரிமைகளையும், சமசந்தர்ப்பங்களையும் பெற்று வாழ்வதற்கான வழி வகைகளைக் காண்பதில் கவனம் செலுத்தி வருகிறதே யன்றி, சலுகைகள் பெறுவதில் கவனத்தைச் செலுத்துவதில்லை.

ராமசாமியார்களின் இந்தப் பித்தலாட்டங்கள் எல்லாம் நீண்ட நாள் நீடிக்க முடியாது. என்பதைக் கூறி, நமது லட்சியமான திராவிட நாடு திராவிடருக்காகப் பாடுபடுவதில் பெரும் பங்கு கொள்ள வாரீர் என மீண்டும் உங்களை வரவேற்கிறேன்."

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

பட்டனர். அவர்களில் பலருக்கு சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டது. 16-ந் தேதி சாத்வீகப் போராட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து 4 தோழர்களின் உயிரை போக்கியதோடன்றி யில் நமது கழகத்தையும், கம்யூனிஸ்டு அலுவலகத்தையும் சோதனை செய்தது. நம்முடைய கவனத்தை அங்கேயும் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

எனவே, இந்தப் போராட்டங்களிலே யெல்லாம் நாம் கலந்து கொண்டும், ஆதரவு தந்தும் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

இத்தனை பிரச்சினைகளையும் சமாளிக்க வேண்டுமென்றால் சென்னை சர்க்கார் மத்திய சர்க்கார் பிடியிலிருந்து விலகினால்தான் முடியும்.

எனவே, நாம் இறுதியாக மத்திய சர்க்காருடன் நடத்தப் போகும் போராட்டத்திற்கு இந்த மாநாடு வழி வகுக்கும் என்று கருதி இந்த மாநாட்டை திறந்து வைக்கிறேன்."

'ராஜ்ய சபா'

பண்டிதரின் நாமாவளி

புதுடில்லி, ஆக. 22—

பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களிடையே பேசும் போது இந்தியப் பாராளுமன்றத்தின் மேல் சபை இனிமேல் 'ராஜ்ய சபா' என்று அழைக்கப்படுமென்று கூறினாராம்.

நடப்பு ஆண்டில், உருளைக்கிழங்கு சாகுபடி விஸ்தீரணம் 6,45,000 ஏகராவும், உற்பத்தி 16,57,000 டன்னுமாக இருக்கு மென்று தெரியவருகிறது.

சாத்தான்குளம் பன்னீர்செல்வம் நூல் நிலைய ஆண்டு விழா

12—8—54ல், நூல் நிலையத்தில், தோழர் பி. என். கிருஷ்ணன் தலைமையில் ஆண்டு விழா நடைபெற்றது. தோழர்கள் கே. சேர்மத்துரை சொற்பொழிவாற்றினர்.

திராவிட முன்னேற்றக் கழகத் அமைப்பாளர் தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. (19, குள்ள நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.